எவ்வளவு பங்குத்தொகை போட்டு இருக்கிறார்கள்? அந்தப் பங்குத்தொகையைவிட அரசாங்கத்தின் நிறுவனத்தின் மூலம் அளித்த தொகை அதிகமாயிருந்தால் அரசாங்கமே அதை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மற்றவர்கள் பங்குத் தொகை பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தக் கூட்டுத்துறையிலே தொழிற்சாலை அமைப்பது என்பதற்கு முன்னாலேயே இம்மாதிரி சேஷசாயி பேப்பர் மில்லிற்கு 1 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒரு கோடி ரூபாயைத் திருப்பிப் பெறுவதற்கோ அல்லது அந்த ஒரு கோடி ரூபாய் கொடுத்திருப்பதால் அரசு கண்ட்ரோலை அதிகமாக வைத்து பள்ளிப்பாளையம் தொழிற்சாலையை நடத்த ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது கூட்டுத்துறை மூலம் ஆரம்பிக்கப்பட்டது அல்ல. 1967-க்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கம் எந்தவிதமான பங்கு முதல் போடவில்லை. மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூட்டிலே பணம் போடுகிறார்கள். இந்தக் கம்பெனியைப் பொறுத்தவரையில் மாநில அரசு நிதி நிறுவனம் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். இதற்கேற்ற வகையில் இதிலே அவர்களுக்கு கண்ட்ரோல் இருக்கிறது.

All India Trade Test

* 137 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the All India Trade Test is being conducted in Madras City during 1971–72 ;

(*b*) if so, the subjects in which they are conducted; and

(*c*) the places where they are conducted?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ), (இ) & (உ) சட்ட மன்றத்தின் முன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

அரக்கோணம் அருகிலுள்ள உருக்காலை

*138 வினா.—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்திற்குப் பக்கத்தில் உள்ள ஸ்டீல் உருக்குத் தொழிற்சாலையின் வேலை துவக்கப்பட்டு விட்டதா?

---

* 117-120-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.